**ARTICLE 47 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00070**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 129–135
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# சு. தமிழ்ச்செல்வியின் ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை

**ரேணுகாதேவி க[1,*], முனைவர். நித்யா இரா[2]**

[1]பதிவு எண் : R 20162912, முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளர், தமிழ்த்துறை அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி., India

[2]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** ரேணுகாதேவி க — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சமூகம் என்பது மாறுபட்ட குணங்களை உடைய பல்வேறு மாந்தர்களைத் தன்னுள் அடக்கிய ஓர் அமைப்பாகும். ஒரு சமூகம் என்பது குறிபபிட்ட சில காலத்தில் மட்டுமே நிலைபெறும். அக்காலத்திறகுப் பிறகு இன்னொரு சமூகம் உருவாகும். இதனால், சமூகங்கள் காலந்தோறும் வேறுபடுதலை அறியலாம். சங்ககாலச் சமூகம் என்பது வேறு, இடைக்காலச் சமூகம் என்பது வேறு. பிற்காலச் சமூகம் என்பது வேறு. இச்சமூகங்களின் நிலைகளை அவ்வக்காலங்களில் தோன்றிய பலதிறப்பட்ட இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவ்விலக்கியங்கள் வழி, இன்ன காலத்தில் இன்ன சமூகம் இவ்வாறிருந்தது என்பதைத் தெரிந்து கொளள முடிகிறது. பழைய இலக்கியவகைகளே அன்றி, நவீன இலக்கியவகையான புதினமும் எழுதப்பட்ட காலத்துச் சமூகநிலையை எடுத்துக்காட்ட முறபடுகிறது. அவ்வகையில், சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளின்வழிப் புலனாகும் வெவ்வேறு சமூக வாழ்க்கை மற்றும் அவற்றின் நிலைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** சு. தமிழ்ச்செல்வி; சமூகவியல்; ஆறுகாட்டுத்துறை; அளம்; புதினம்; சிறுகதை; தனிமனித சிந்தனைகள்; சமூகவாழ்க்கை

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, ரே., & இரா, மு. நி. (2026). சு. தமிழ்ச்செல்வியின் ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

மனிதர்களின் சமூக வாழ்வினையும், நிகழ்வுகளையும் உணர்வுகளையும் ஒருங்கே கொண்டுள்ளதாகப் படைப்பது படைப்பாளனின் கடமையாகும். தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் இத்தகையப் பண்பினதாகவே படைக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் நிகழும் இன்ப-துன்ப நிகழ்வுகளை உணர்ச்சியுடன் படைக்கும் எணணற்ற படைப்பாளர்கள் தமிழில் இருக்கின்றனர். இன்றைய நவீன இலக்கியங்கள் சாதாரண மக்களின் இனனல்கள், துன்பங்கள், ஆகியவற்றை எடுத்துரைப்பதாக இருக்கிறது. இதில் கவிதை, சிறுகதை, புதினம் ஆகியவையும் அடங்கும்.

தற்கால இலக்கியங்களான புதினம், சிறுகதை போன்றவற்றைப் படைத்து எளிய மக்களின் வாழ்வை உலகிற்கு காட்சிப்படுத்தும்

எழுத்தாளர்களில் சு.தமிழ்ச்செல்வியும் ஒருவர். இவரின் இலக்கியங்கள் தனிமனித, சமூதாயம் சார்ந்த, குறிப்பாக சாதாரண எளிய மக்களின் எதார்த்ததை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றது. பெண்களின் மீது சமுதாயம் கொண்டுள்ள மதிப்பீடுகளை தராசு தட்டில் இட்டு எடைபோட வைக்கும் இவரது படைப்புகள்.

தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ படைப்பாளர்கள் பல்வேறு பொருள்சார்ந்த படைப்புகளைப் படைத்திருந்தாலும், கிராமப்புறங்களில், நகர்ப்புறங்களில் ஆணாதிக்க வாழ்வில் தங்களின இன்ப துன்பங்களை இழந்து, சமூதாயத்திலும் குடும்பத்திலும் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண்களின் வாழ்க்கையை இவர் எடுத்துரைப்பதில் இவரது படைப்புகள் வெற்றியடைந்துள்ளன.ஆதலால் இவரது படைப்புகள் தமிழ் எழுத்துலகில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது எனலாம். அநதவகையில் சமூகவியல் பார்வையில் படைக்கப்படும்; இலக்கியங்களாக சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள் இருப்பதால், அப்படைப்புகள் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தையும், மாற்றங்களையும் ஏற்படுத்துபவனவாக இருக்கிறது. இதனடிப்படையில் சு.தமிழ்ச்செல்வியின படைப்புகளான புதினம், சிறுகதை போன்றவைகள் எவ்வாறு சமூவியல் பார்வையினை வெளிப்படுத்துகிறது என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்கமாக ஆராய்கின்றது.

## சமூகவியல் சொல் விளக்கம்

அறிவியல், புவியியல், வேதியியல், உயிரியல் என வழங்கப்படும் சொற்களைப் போல சமூகவியல் என்பதும் ஒன்றாகும். சமூகம் சார்ந்தக் கருத்துக்களைப் படிக்கும் துறை, பயிற்றுவிக்கும் துறை என்பதனால் இதனை சமூதாயவியல் என்றனர். சமூகம் + இயல் - சமூகவியல் என ஆகும். ஆகவே சமூகவியல் பற்றியும், அதனின் பொருள் பற்றியும் அறிந்துகொள்ள முதலில் “சமூகம்” என்றால் என்பதற்கான பொருள் விளக்கத்தைக் காணலாம். சமூகம் என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் கூறும் கருத்துக்களைக் காணலாம்.

## கலைக்களஞ்சியம்

**“சமுதாயம் என்பது பொதுவாக மக்கள் வாழும் இடம், காலம், சமயம், கல்வி, மொழி பொருளாதார அமைப்பு மற்றும் உலகத்தோடு கொள்ளும் உறவுமுறை ஆகியவற்றால் அமைவதாகும்”**1 எனக் கலைக்களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது. மேலும் கூட்டு வாழ்க்கை அல்லது மனித இனத்தின் சேர்க்கை என்று இதனை விளக்குகிறார். தோழமை என்னும் பொருள் கொண்ட இலத்தீன் சொல்லான “சோயஸ்”என்பதிலிருந்தே சமுதாயம் என்ற சொல் தோன்றியது எனக்; கூறுகிறது. **“ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்”**2 எனக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. இதிலிருந்து மனிதன் இணைந்து வாழும் அமைப்பு என்பதும், அனைவரும் கூடிவாழும் ஒரு முறை எனவும் கொள்ளலாம்.

**“இந்தப் புதிய நடப்புச் சமுதாயத்திற்கு முன்நிற்கும் படிநிலைச் சமுதாயத்திற்கும்; எல்லை வரம்போ, காலவரையறையோ காட்டுவது அறிவிற்கு எட்டாத வகையில் இது காலமறியாது தோன்றியது. அந்நாள் தொட்டு மெல்ல மெல்ல வளர்ந்து உருபெற்று, காலதேவன்**

**கையில் பட்டு, பெறவேண்டிய மாறுதல்களைப் பெற்று, வளர்ந்து வாழ்ந்து வரும் ஒப்பற்ற ஒன்று. ஆகவே காலத்திற்குக் காலம் சமுதாயம் வளர்ந்து வருகிறது. புதிய புதிய மாற்றங்களைப் பெற்றுத் திகழ்கிறது”3** என்கிறார் அ.மு.பரமசிவானந்தம். இவரின் கருத்தின்படி பார்த்தால் நிலைத்த சமூகங்கள் என்ற ஒன்று இன்றுவரையில் இல்லை என்றே கூறலாம். காலத்தால் மாறும் தன்மை கொண்ட, காலத்திற்கேற்ப மாறும் தன்மைகொண்ட சமூகங்களே நிலைத்து நிற்கவும் முடியும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## சமூகமும் இலக்கியங்களும்

இலக்கியங்களின் முதனமையானப் பணியே மனிதர்களின் நிலையைப் பாடுதல் எனலாம். **“பாடுதல் என்றால் முதலில் பாடும் வழக்கம் இருநதது. அதனால் அதன் பொருளால் இவவாறுதான் சொல்ல வேண்டும். பாட்டு அல்லது செய்யுள் வடிவில் இருந்த இலக்கியங்களே பின்னால் புதுவடிவம் பெற்று தற்கால இலக்கியங்களாக வலம் வருகிறது. இலக்கியம் படைப்பது என்பது கலையாகக் கருதப்பட்டது. இதனை “கலைகளுள் இசை மிகச் சிறந்தது என்பர் சிலர். இலக்கியமே மிகச் சிறந்தது என்பர் சிலர்”4** என மு.வ உரைப்பதின் வழியே உணரலாம்.

மேலும், கலையாகப் படைக்கப்படும் இலக்கியங்கள் மனித வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதையே அறிஞர்கள் கலை கலைக்காகவே என்றனர். இதனையே ஆபர்குரோம் “அறிவின கலப்பு இல்லாத காரணத்தாலும், கேட்டோர் யாவரையும் பிணிக்கும் தன்மையாலும் இசையே சிறந்தது என்பர். மனித வாழ்வின் சிறப்பியல்பாக உள்ள மொழியால் அமையும் காரணத்தாலும், வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் அளித்தலாலும் சிறந்தது என்பர்” என மு.வ ஆபர்குரோமின சான்றினை எடுத்துக்கூறி இலக்கியம் கலையாகப் படைக்கப்படுகிறது எனக் கூறுகிறார். மு.வ கூறுவதிலிருந்து மனிதனோடு தொடர்புடைய இலக்கியம் என்பதை நாம் உணரலாம். மனித வாழ்வியலை அழகுறப்பாடுவதில் இசையைக் காட்டிலும் தன் அழகு சொல்லால் அலங்கரித்துச் சொல்வது இலக்கியமே என்பதையும் மு.வரதராசனார் வலியுறுத்துவதைக் காணலாம்.

## சு.தமிழ்ச்செல்வியின படைப்புகள் சமூகவியல் பார்வை

சு.தமிழ்ச்செல்வி பெண் படைப்பாளர், நவீன தமிழ் இலக்கிய உலகில் தனக்கென்று தனியொரு இடத்தைப் பெற்று மக்களின் எளிய வாழ்க்கையைப் புதினங்களாக, சிறுகதைகளாகப் படைத்துவருகிறார். பெண்களின் வேதனைகளை சமூகத்திற்கு வெளிச்சமிட்டு காட்டவே இவர் படைப்புகளைப் படைத்து வருகிறார். இவரின் படைப்புகளில் ஆண்-பெண் ஆகியோரின் சமூக நிலையும், எளியவர்களின் குடும்பங்கள் தற்காலத்தில் எத்தகையத் துன்பத்துடன் இருக்கிறது என்பதையெல்லாம் தன் எழுத்துக்களின் வழியே வெளிப்படுத்தி வருகிறார்.

## ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை

ஆறுகாட்டுத்துறை என்ற புதினம் மீனவர்களைப் பற்றியதாக இருக்கிறது. மீனவர்களின் வாழ்வியலை முன்னிறுத்தி படைப்பாளர்

படைத்துள்ளார். நோக்கம் எதுவானாலும் சமூதாயவியல பார்வையில் பார்க்கும் போது புதினங்களில் பேசப்படும் கதையானது ஏதாவது ஒரு இனத்தவரை முன்னுறுத்தி கதை படைக்கப்பட்டிருக்கும் என்பதற்கு "ஆறுகாட்டுத்துறை" சான்றாகக் கூறலாம். திருமணம், கல்வி, தொழில், இன்னல்கள் என்ற அடிப்படையில் ஆறுகாட்டுத்துறை புதினத்தை அணுகலாம்.

இந்தப் புதினமும் முழுமுழுக்க மீனவர்களைப் பறறியது என்றாலும், அதில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் கற்பனையானது என்பது இதனை வாசிக்கும் போது உணரலாம். காரணம் படைப்பாளர் தான் கண்ட காட்சிகளை அப்படியே சொல்லியிருந்தாள் அது படைப்பிலக்கியம் என்ற தன்மையைப் பெறாது. ஆதலால் பாத்திரங்களையும் கதையையும் கற்பனையாகவே படைத்துத்துள்ளார். இக்கதையில் வரும் கதைகளில் ஏதேனும் ஒரு கதாப்பாத்திரம் உண்மையில் வாழ்ந்திருக்கலாம். புதினத்திற்காக அனைத்து உண்மையாக வாழ்ந்த, வாழும் மனிதர்களை படைத்துக்காட்டமுடியாது என்பதற்கு ஆறுகாட்டுத்துறை புதினம் சான்றாக அமைகிறது.

கடல் நீரில் மீனவர்கள் வலை வீசுவது, கடற்காற்று வீசுவது,அலைகளை எதிர்த்து படகு செலுத்தும் தன்மைகளையும், கடற்கரையையும் அதனை ஒட்டிய கிராமப் புறங்களையும் சிறந்த வருணனைகளுடன் படைத்துக்காட்டியுள்ளார் எனலாம். மீனவர்களின் வாழ்வியல் மீன் விற்பது, பிடிப்பது, இரவு நேரத்தில் அவர்களின் மகிழ்வுகள், திருவிழாக்கள் எனப் பல்வேறு வகைகளில் மிகச்சிறந்த வருணனைகளுடன் இப்புதினம் அமையப்பெற்றுள்ளது.

**"கடலுக்குள் முன்குவிந்து வளைந்த, கடற்கரை எங்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மரக்கணங்களும் கரையேற்றி வைக்கப்பட்டிருக்கும் கட்டுமரங்களுக்கும் மத்தியில் துறையில் சற்று தூரத்தில் ஆழமான பகுதியில் வரிசைவரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன விசைப்படகுகள் ஆறும். சிறு பிள்ளைகள் ஏறி விளையாட எட்டாத தூரமாயிருந்தது அந்த தூரம். தொடுமரம் கொண்டே படகுகளுக்குப் போக வேண்டும். பெண்களும் சிறுவர்களுக்கும்;; கிட்டேபோய் அவற்றைத் தொட்டுப் பார்க்கவும் அவற்றின் வழவழப்பையும் வர்ண ஜொலிப்பையும் தடவிப் பார்க்கவும் ஆசையாக இருந்தது"**5 என்பதில் படைப்பாளர் நேரில் கண்டதை அப்படியே கற்பனை நயத்துடன் சொல்லும் போது தொட்டுத்தடவிப்பார்க்க ஆசையாக இருந்தது எனத் தன் மன எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது படைப்பின் வியப்பான கற்பனை நயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## கதை நிகழும் இடங்கள்: திருமணம், கல்வி, தொழில்

திருச்செநதூர், தூத்துக்குடி, கோடியக்கரை, வேதாரண்யகடற்கரை ஆகிய பகுதிகளை ஒட்டியுள்ள கடல் சார்ந்த பகுதிகள் கதை நிகழும் இடங்களாக இருக்கிறது. இப்புதினத்தில் மீனவர்களின் வாழ்வியல் கூறப்பட்டுள்ளதால், இவர்களின திருமண முறையை முதலில் காணலாம். இவர்கள் திருமணம் நிச்சயக்கப்பட்ட திருமணங்கள் மற்றும் காதல் திருமணங்கள் என்ற இரண்டு முறைகளில் அமைகிறது.

**“சவரிமுத்துவிற்கு சொந்த ஊர் திருச்செந்தூர். அதே ஊரைச் சேர்ந்த ஆரோக்கியத்தின் மீது ஆசைப்பட்டிருக்கிறான். அவளுக்கும் சவரிமுத்துமேல் ஆசைதான். ஆனால் இருவரின் வீட்டிலுமே சம்மதிக்கவில்லை. இரவோடு இரவாகக் கிளம்பி இருவரும் ஊரைவிட்டு ஓடி வந்துவிட்டார்கள்”**6

மீனவர்கள் பிள்ளைகளை அவர்கள் விரும்பினால் பள்ளிக்கூடத்திற்கு படிப்பதற்கு அனுப்பி வைப்பர். “தான் படித்த புத்தகங்களையும் நோட்டுகளையும் எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான் சாமுவேலின் தம்பி அருள்தாசு. முக்கியமானவைகளையும் எப்போதும் பயன்படக் கூடிய புத்தகங்களையும் பெட்டிக்குள் பத்திரப்படுத்தினான். பதினொன்றாம் வகுப்புப் பாடப் புத்தகங்களை தனியா அடுக்கினான். அவற்றை பழைய விலைக்கு யாராவது கேட்டால் கொடுக்கலாம். இல்லையென்றால் வேதாரண்யத்தில் இருக்கும் பழைய புத்தகக் கடைக்காரரிடம் போட வேண்டியதுதான். இவனே பாதி விலையில் வாங்கிய பழைய புத்தகங்கள்தான் அவை… அருதாசுக்கு பள்ளிப் படிப்பு முடித்துவிட்டு மேற்கொண்டு படிக்க வேண்டுமென்றால் தஞ்சாவூருக்குத் தான் போக வேண்டும். இவனுடன் படித்த வேதாரண்யத்துப் பையன்கள் சிலர் தஞ்சாவூர் கல்லூரியில் சேர்ந்து படிக்கப் போவதாய் சொல்லிக் கொண்டிருந்தார்கள்”7 இதன் மூலம் மீனவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் அக்கறை செலுத்தினர் என்பது தெரியவருகிறது.

மீன்பிடித் தொழில்தான் முதன்மையானத் தொழில். நன்கு மீன்பிடித்தொழிலில் வல்லவர்களாக இருப்பவர்களை முழுக்காளி என அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

## நம்பிக்கைகள், திருவிழாக்கள்,வழிபாடுகள்

“வயத்துக் காவ கடல் தாயிகிட்ட கையேந்துனா அவ அள்ளிஅள்ளி; குடுப்பா. ஆனா பழி வாங்குற எண்ணத்தோடு எறங்குனா நம்பள காவு வாங்கிடமாட்டாளா?”8 என்பதில் இவர்கள் கடல்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது புரியும். மீனவர்கள் கடலைத் தங்களின் தெய்வமாகவே நினைத்தனர்.

> “தாயே சமுத்திராதேவி எல்லாத்தயும் நீ கேட்டுகிட்டுதான் இருக்கிறியா? ஓம் பொண்ணைப் பத்தி என்னென்னமோ பேசுறாவொள..ந பொங்கிவர மாட்டியா?” (ஆறுகாட்டுத்துறை,பக்-98).
> “சமுத்திராதேவி…சமுத்திராதேவி ஆ..ஊன்னு கத்துறியே அநத அம்மாகிட்டயேக் கேட்டுப்பாரு”(ஆறுகாட்டுத்துறை,பக்-98), போன்றவற்றை உதாரணத்திற்குக் காட்டலாம்.

“மாசி மாதம். பௌர்ணமி நிலவொளியில் குளிர்ந்து கிடந்தது நிலம். மன்மதன் கோயில் திடல் பெட்ரோமாக்ஸ் கிளக்கு வெளிச்சத்தில் மேலும் ஒளிர்ந்தது. பலூன் ஊதாங்குழல் விசிறிமட்டை அமைந்திருப்போரும் பொறித்த முறுக்கு விற்போருமென அத்திடல் கோலாகலமாய் காட்சியளித்தது. விளையாட்டுப்பொருள்கள், கிளுகிளுப்பை, பலூன் சகிதமாய் பிள்ளைகள் அங்குமிங்குமாய் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர்.”9

**“சிங்காரவேலுப்படையாட்சிக்கு முன் அவருடைய அப்பா பொன்னுசாமி படையாட்சி, அவருக்கு முன் அவருடைய அப்பா**

**ரெங்கசாமி படையாட்சி, அவருக்கு முன் அவருடைய அப்பா தம்பியப்பன் படையாட்சி, அவருக்குமுன் ராமு படையாட்சி, அவருக்குமுன் கந்த படையாட்சியும் நடித்தார்கள்"**10 என்பதின் வாயிலாக திருவிழா மிகச்சிறப்பாக நடத்தப்படுகிறது என்பதை நாம் அறியலாம்.

ஆறுகாட்டுத்துறையினர் கும்பிடும் காவத்தம்மன் கோயிலுக்கோ, நடுகாட்டய்யா சவுரியா கோயில் பூசைக்கோ, கடலில் செல்லும் போதெல்லாம் கூடவந்து உயிர்காக்கும் மலையாள வீரன் கோயிலுக்கோ ஆறுகாட்டுத்துறையினரோடு சேர்ந்து செல்லாமல் இருந்ததுமில்லை.

**"..குண்டுகட்டாய் தூக்கிக்கொண்டு ஓடினார். ஊர்சனமும் பிரசவம் பார்க்கும் பெண்களும் அவர் பின்னால் ஓடினர். கடற்கரையில் கொண்டுபோய் தன் பொண்டாட்டியை போட்டவர், „தாயே..நீ குடுத்தப்புள்ள யாம் பொண்டாட்டி வயத்துக்குள்ள. யாம் பொண்டாட்டிய எனக்குக் குடுத்துரு. ஓம் புள்ளய நீ பாத்துக்க" என்றவாறே கரையில் கிடந்து புரண்டார்.பிரசவம் நன்றாக முடிந்தது. பிள்ளையும் தாயும் ஆரோக்கியமாக இருந்தனர்"**11 என்பதிலிருந்து அறியமுடிகின்றது.

கடலில் மீன்பிடித்தல் என்பதால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. சாமுவேலின் அம்மா ஆரோக்கியம் கருவாட்டு லாரியில் பயணிக்கும் போது, தூங்கி வண்டியிலிருந்து விழுநது இறந்தாள். சாமுவேலின தந்தை சவரிமுத்து கடலில் பழுதான படகினை சரிசெய்ய சென்றவன் கடலில் அரிய வகை மீன் கடித்து இறக்கிறான். சாமுவேல் தன் மனைவியிடம் கோபித்துக் கொண்டு கடலில் போனவன், சூறாவளிக் காற்றடித்து வேறுதேசத்திற்குச் சென்று பல ஆண்டுகள் கழித்து திரும்பி வருகிறான். இவவாறு வாழ்க்கை என்பதும் உயிர் என்பது மீன்வர்களுக்கு மிக எளிதாக எடுத்துக்கொள்கின்றனர். குறைந்த ஆயுளில் வாழ்வது., கல்வி கற்கமுடியாது சூழல், பொருளாதாரத் தட்டுப்பாடு, கடலில் தோன்றும் புயல்காற்றுச் சேதங்கள் என இவையனைத்தும் இவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களாக எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

இவ்வாறாக, சு.தமிழ்ச்செல்வி அவர்களின் படைப்புத்திறனை சமுகவியல் பார்வையில் கண்டறிவதற்காக சமூகவியல் என்றால் என்ன? என்பதற்கான விளக்கம் அளித்து, சமூகம் என்பதின் பொருள் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. படைப்பாளரின் படைப்புகள் எவ்வாறு சமுகப்பார்வையுடன் படைக்கப்பட்டிருக்கிறது என்பதை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கதாப்பாத்திரங்களின் தன்மைகள், தனித்துவமான நிகழ்வுகள், கதையின் திருப்புமுனைகள் என பல்வேறு கோணத்தில் இலக்கியக் கொள்கையுடன், உத்திகளாச் சொல்லப்பட்டு, அவற்றை சான்றுகளுடன் கூறப்பட்டுள்ளது. சு.தமிழ்ச்செல்வியின் புதினங்கள், சிறுகதைகள் சமூகப்பார்வையில் படைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் சொல்லப்பட்டு விளக்கப்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. கலைக் களஞ்சியம் தொகுதி,ப.477
2. மேலது, ப.489
3. அ.மு.பரமசிவானந்தம்,-சமுதாயமும் பண்பாடும், பக்-24
4. மு.வரதராசானார், இலக்கியத் திறன், பக்-44
5. சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, பக்-50
6. மேலது, பக்-9-10
7. மேலது, பக்-105
8. மேலது, பக்-44
9. மேலது, பக்-26
10. மேலது, பக்-28
11. மேலது, பக்-43

© 2026 ரேணுகாதேவி க, முனைவர். நித்யா இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..